III.—PRESENTATION OF THE BUDGET FOR 1966–70.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முறைப்படி இம் மேலவையின்கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிரொளிக்கின்ற கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி வழக்கம் போல் சற்று விரிவாக விளக்குகின்ற வகையில், இன்று காலை நான் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய எனது உரையின் படிகள்* மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளன. எனவே, கூறியதையே கூறாது; இந்நிதி நிலை அறிக்கையின் சிறப்பியல்புகள் சிலவற்றைப் பற்றி மட்டும் சில சொல் கூறி அமைகிறேன். இரு முறை அகவிலைப்படி வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டதன் விளைவாக திட்டமல்லாச் செல வினம் கணிசமாக உயர்ந்த பின்னரும், விற்பனை வரி போன்ற தலைப்புகளின்கீழ் வரவின வளர்ச்சி விதம் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஓரளவு மந்த நிலை எய்தியிருப்பினும், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகள் திட்ட முதலீடு குறித்து, தொடக்கத்தில் வகை செய்யப்பட்டிருந்த 79.68 கோடி ரூபாய்க்கு மாறாக, 89.07 கோடி ரூபாய் அளவிற்குப் பெருகியுள்ளதை அறிய இம்மன்றம் களிப்படையுமென நம்புகின்றேன். திட்ட முதலீட்டில் காணும் உயர்வின் பெரும் பகுதி மின்சார வளர்ச்சியின்பாற்பட்டது; இத் தலைப்பில் கண்டுள்ள குறிப்பிடத்தக்க ஏற்றம் கிராமப்புற மின்வசதித் திட்டங்கள் முனைப்பாகச் செயல்படுத்தப்படுவதால் ஏற்படுகிறது. இவ்வாறே சிறுபாசனம், பெரும் பாசனம் முதலிய தலைப்புக்களின்கீழ் திட்ட முதலீடுகள் சற்றே உயர்ந்துள் ளதையும் காணலாம். இவ்வகையில் ஆண்டுத் திட்டமும் குறிப் பாக வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்குத் தொடர்பான வேலைத் திட்டங்களும் குறித்த அளவிற்கு உயர்வாகவே நிறை வேற்றப்பட்டுள்ளன.

2. கிராமப்புற மின்வசதி, சிறுபாசனம் போன்ற திட்டங்களின் உயர்ந்த முதலீடு, வேளாண்மை வளர்ச்சிக்கான அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், வருந்தத் தக்க வகையிலே நடப்பாண்டில் தவறி விட்ட பருவ மழையால் விளையுள் கடந்த ஆண்டின் அளவை விடக் குன்றியுள்ளது. நாட்டுப்புறங்களில் பருவமழை பொய்த்ததால் விலைவாசிகள், உற்பத்தி, தொழில் வாய்ப்புகள் முதலியவற்றின் மீது ஏற்பட்ட விளைவுகளை விரைவில் உணர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல், தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்த்தல் போன்ற பல திட்டங் களை அரசு நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. உடனடியாக 157 லட்சம் ரூபாய் முதலீடு செய்கிற வகையில் பல திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடி நீர்க்கிணறுகளையும் பாசனக் கிணறுகளையும் ஆழப்படுத்துதல், சாலைகளையும், பாசன வாயில்களையும் சீர்படச் செய்தல் போன்ற பணிகளுக்காக இத்

* Printed as Appendixes I to IV on pages 27–81.

தேவைகளை நிறைவேற்றவும் அதே நேரத்தில் காலப்போக்கில், மாநில வேளாண்மைப் பொருளாதாரத்தை வளமூட்டும் வகையிலும் இவ் வேலைத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும். பருவ நிலையின் பயனிலாப் போக்கிற்கு ஆட்பட்ட மக்களுக்கு வேண்டிய துயர் தணிப்பு அளிக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு எவ்வளவு உள்ளதோ அவ்வளவு மத்திய அரசுக்கும் உண்டு. இதனால் தான், இத் திட்டங்களை நிறைவேற்ற நாம் மத்திய அரசின் உதவியையும் நாடியுள்ளோம். வறட்சி நிலையினால் ஏற்பட்டுள்ள நிலைமையினை அரசு உன்னிப்பாகப் பார்த்து வருமென்றும் இப் பகுதிகளிலுள்ள மக்களின் துன்பத்தைப் போக்குவதற்குத் தேவையான அனைத்தையும் இயன்ற அளவிற்கு நிறைவேற்றுமென்றும் இம் மன்றத்திற்கு நான் உறுதி கூற விரும்புகிறேன்.

3. அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், திட்டத்தையும் ஆய்வு செய்கையில்; வருகிற ஆண்டில் மாநில அரசின் நிதி நிலை வாயில்களில் ஓரளவு உறுதியற்ற நிலை நிலவி நிற்பது தவிர்க்க முடியாதது ஒன்று என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இப்போது இயங்கி வரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழு, 1969-70-ல் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் நிதி வாயில்கள்—மானிய உதவித் தொகைகள் குறித்து இடைக்கால அறிக்கை ஒன்றையே அளித்துள்ளது. இவ்வறிக்கையின்படி, மாநில அரசு பங்கு பெறக்கூடிய மத்திய வரியினங்களின்கீழ் அதற்குரிய தொகைகளையோ அல்லது அரசியல் அமைப்பின் 275-வது பிரிவின்கீழ் உள்ள உதவித் தொகைகளையோ உயர்த்தும் வாயிலாக மாநில அரசு கூடுதல் நிதி வசதிகள் எதனையும் பெறவில்லை. ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் காலத்தில் அமைக்கப்பட்ட நிறுவனங்களையும், பணிகளையும் பேணி வருவதற்காகும் செலவினம்; அதாவது அலுவலக வழக்கில் "பொறுப்பேற்கப்பட்ட செலவினம்" என்று கூறப்படும் செலவினம் முழுவதும் இந்திய அரசிடமிருந்து எவ்வகை உதவியுமின்றி மாநில அரசே ஏற்க வேண்டியுள்ளது. இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டால், நிதி வாயில்களைத் திரட்டுவதில் ஊக்கத்துடனும் அவற்றைப் பேணிக் காப்பதில் விழிப்புடனும் இவ்வரசு செயல்பட்டு வந்திருப்பினும், அடுத்த ஆண்டிற்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கிலும், மொத்தமாகவும் பெருந்துண்டு விழுவதற்கான காரணத்தை உணர்வது எளிதாகும். நிதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை நமது மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் பற்றிப் பரிவுடன் அறிந்து கொண்டதற்கிணங்க அமையுமென்றும், இம் மாநிலத்தின் திட்டமல்லாக் கணக்கில் விழும் துண்டு முழுவதையும் அடைப்பதற்கேற்ப மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்குப் பெருமளவில் நிதி வாயில்கள் மாற்றப்படும் வகையில் அதன் பரிவுரைகள் அமையுமென்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். பொதுவாக, நிதி ஆணைக்குழுக்கள் தங்கள் ஆய்வில் அடங்கும் கால எல்லையில்

மாநில அரசுகளுக்கு அவை ஏற்கனவே விதித்து வரும் வரியின அளவுகளில் கிட்டும் வரவினங்களை மதிப்பிட்டும், பேணுதல் பாங்கு பெற்ற செலவினங் குறித்துக் குறைந்த அளவு வளர்ச்சி வீதத்தையே கருத்தில் கொண்டும், ஏற்கனவே ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களின் அடிப்படையிலும் அவற்றின் திட்டமல்லாக் கணக்கின்பாற்படும் தேவைகளை மதிப்பிட்டு வருவது மரபாக உள்ளது. இந்த நடைமுறையின் விளைவால், நிதி வாயில்களைத் திரட்டுவதில் ஆர்வங் காட்டியும் வரவுக்கு மீறிய செலவு செய்வதைத் தவிர்த்தும் வந்துள்ள நமது மாநிலம் போன்ற சில மாநிலங்களுக்குப் பெருந் தீங்கு விளையும் நிலையேற்படுகிறது. எனவே, தமிழ் நாட்டில் நமது மக்களின் நபர்வாரி வருவாயை நோக்குமிடத்து நபர்வாரி வரி விதிப்பு மிக உயர்ந்துள்ளதென்றும் மிகப் பெரும்பாலான பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மேலான நிலையில் உள்ளதென்றும்; இந் நன் முயற்சிகளை நிதி ஆணைக்குழு தன் இறுதி அறிக்கையின்போது கருத்திற் கொள்ளவேண்டும் என்றும் அக் குழுவின்முன் வாதாடியுள்ளோம். 1966-67-லிருந்து தொடங்கிய ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவில், பிற மாநிலங்களைப் போலவே தமிழ்நாடும் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கு ஆட்பட வேண்டியிருந்தது. அதன் காரணமாகவே தேவையைவிட மிகக் குறைந்த அளவிற்கு தன்னுடைய நிறுவனங்களையும் பணிகளையும் பேணிவரும் நிலையேற்பட்டது. நமது மரபுக்கேற்பக் கடும் இடர்ப் பாடுகளைத் தவிர்க்கும் வகையில், 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் பேணுதல் செலவினங்கட்கு வகை செய்வதில் நாம் எச்சரிக்கையாக இருந்துள்ளோம். கடந்த காலத்தில் இன்றியமையாத பணித் துறைகளைப் பேணி வருவதற்கு மாநில அரசு போதிய அளவில் நிதி ஒதுக்க இயலாமைக்கு நிதிப் பற்றாக்குறையே காரணமென நாம் எடுத்தியம்பி வருகையில், தற்போதுள்ள செலவின அடிப்படையில் நிதி ஆணைக்குழு தனது முடிவுகளை மேற்கொள்ள முற்படுவது நியாயமல்ல. தற்போதைய நிதி ஆணைக் குழு, இன்றியமையாத பணிகளைப் பேணி வருவதற்கு மாநில அரசுகளின் தேவைகளைச் சீரிய விதி முறைகளின் அடிப்படையில் மதிப்பிடு மென்றும், தேவைக்குப் போதாமலும் உள நிறைவு அளிக்காத நிலையிலும் மாநிலங்களின் இன்றியமையாப் பணித்துறைகள் பேணி வரப்படும் தற்போதைய அவல நிலை தொடர்ந்து நீடிக்கும் வகையில் அதன் பரிவுரைகள் இருக்காதென்றும் நம்புகிறோம். இப்போது மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்களை நுணுக்கமாக ஆய்வு செய்வதைப் போன்ற மத்திய அரசின் பல்வேறு துறைகளின் செலவினங்களில் காணப்படும் உயர்வுகளையும் நிதி ஆணைக் குழு கூர்ந்தும் ஆழ்ந்தும் ஆராயுமாயின் மாநிலங்களுக்குக் கூடுதலான அளவில் நிதி வாயில்களை மாற்றுவது கடினமாக இராது.

4. மாநிலங்களின் நிதித் தேவைகளைக் குறித்து அவ்வப்போது ஓர் உயர்மட்டக் குழுவின் மூலம் ஆய்வுசெய்ய வகை செய்கிற நமது அரசியலமைப்பு, திட்டத் தேவைகட்கும் திட்டமல்லாக்

தேவைகட்குமிடையே எவ்விதப் பாகுபாடும் செய்யவில்லை. பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு நிதிகளை நெறிப்படுத்தும் முதன்மைக் கருவியாகத் திட்ட ஆணைக் குழு தோன்றிய பின்னரே, இவ் வேறுபாடு செயலுக்கு வந்தது. எனவே, மாநிலங்களின் நிதித் தேவைகள் இப்போது இரு கூறுகளில் அளவிடப்படுகின்றன, நிதி ஆணைக் குழுவின் தீர்ப்புகளுக்கிணங்க, வளர்ச்சியல்லாச் செலவினத் தேவைகளையும், பேணுதல் பாங்குபெற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவினங்களையும் மத்திய வரியினங்களைச் சட்டப்படி பகிர்ந்துகொள்வதன் வாயிலாகவும், உதவி மானியங்கள் வாயிலாகவும் சரிக்கட்ட வேண்டும். கூடுதலான அல்லது விரிவான அல்லது விரிவான வளர்ச்சிப் பணிகளுக்கான தேவைகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப் படும் மத்திய உதவியின் வாயிலாக ஈடுசெய்து கொள்ளவேண்டும். இவ்வாறாக, திட்டத்தின் பகுதியாய் அமையாத மாநிலத் தேவைகளை மாத்திரம் முடிவு செய்யும்வகையில் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஆணைக்குழு நாம் அளித்துள்ள முன்மதிப்பீடுகளில் Forecasts காணப் படும் திட்டமல்லாக் கணக்கில் விழும் துண்டு முழுவதையும் நிறைப்பதற்குப் போதுமான நிதிவாயில்களை மாற்றம் செய்யுமென எதிர்பார்க்கின்றோம். இவ்வெண்ணம் ஈடேறினால் வருவாய்க் கணக்கில் துண்டு விழுந்திருப்பதைப்பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. சட்ட மன்றப் பேரவையின்கண் இன்று காலையில் நான் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருப்பதுபோன்று; வருவாய்க் கணக்கிலும் மொத்தக் கணக்கிலும் துண்டு விழுவதற்குத் திட்டமல்லாக் கணக்கில் துண்டு விழுவதே காரணமாகும். இத்துண்டினை முற்றிலும் அடைப்பதே நிதி ஆணைக் குழுக்களின் வழக்கமாக இதுவரை இருந்து வந்துள்ளது.

5. அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தை இப்போது நோக்குவோமாயின்; அது புதிய நான்காம் திட்டத்தின் பகுதியாக அமைந்தபோதிலும்; நான்காம் திட்டத்தின் நிதிவாயில்களை ஈட்டல்; மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி போன்ற சில இன்றியமையாத முடிவுகள் உறுதியான அடிப்படையில் இன்னும் எடுக்கப்படவில்லை. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி மொத்தத்தில் ஏறத்தாழ மூல நான்காம் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட அதே அளவிற்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும்; மத்திய உதவியில் நமது பங்கு 20 சத வீத அளவிற்குக் குறைக்கப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியதாகும். மத்திய உதவி 50 கோடி ரூபாய் அளவிற்கு வெட்டப்பட்டிருப்பதை நாம் ஏற்க இயலாதென்றும்; தேவைப்பட்டால் தேசிய வளர்ச்சி மன்றம் வகுத்துள்ள கோட்பாடுகளை மறு ஆய்வு செய்யவேண்டுமென்றும் நாம் திட்ட ஆணைக் குழுவின் முன்னர் வாதாடியுள்ளோம். மத்திய அரசிற்கு நாம் செலுத்தவேண்டிய கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பதன் (Rescheduling of debt obligations) வாயிலாக; மூலதனக் கணக்கில் ஓரளவு சுமை இறக்கத்திற்கும்

உரியவராவோம் என்றும் திட்ட ஆணைக்குழுவின் முன் நாம் எடுத்துரைத்துள்ளோம். மத்திய அரசு தன் பங்காக; நான்காம் திட்டத்திற்கென ஈட்டும் கூடுதல் வரியினங்களிலிருந்து நமக்கும் ஓரளவிற்குக் கூடுதல் நிதிவாயில்கள் கிட்டுமென நாம் எதிர் பார்க்கிறோம். நாம் வலியுறுத்திக் கூறியுள்ள இப்பொருள்கள் அனைத்தின் மீதும் தெளிவு பிறந்தாலன்றி; மாநில நான்காம் திட்டத்தை முடிவு செய்வதனால் பெரும் பயன் ஏதும் இல்லையென்றும் வற்புறுத்தியுள்ளோம். ஆயினும்; இதற்கிடையே 1969-70-ம் ஆண்டிற்கான திட்டத்தை வரையறுத்துள்ளோம். இதிலும் குறிப்பாக ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவில் மத்திய உதவி ஒப்புகொள்ளப்பட்ட விகிதாசாரத்தில் அளிக்கப்படாமல் குறைக்கப்பட்டிருப்பதைக்கருதி; இப்போது குறிப்பிட்டுள்ள 36 கோடி ரூபாய் மத்திய உதவியை; 40 கோடி ரூபாய் அளவிற்காவது உயர்த்தத் திட்ட ஆணைக் குழுவிற்கு இயலுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம். அடுத்த நிதியாண்டின் இறுதியில் கொடுத்துத் தீர்க்க வேண்டியுள்ள 13.5 கோடி ரூபாய் மொத்தக் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய தவணைமுறை வைப்பினை மாற்றியமைப்பதற்கும் நம்மிடம் வலிய காரணங்கள் உள்ளன. இவ்வேண்டுகோள்கள் இறுதியில் இந்திய அரசாலும் திட்ட ஆணைக்குழுவாலும் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில்; 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் பகுதியாக 87.20 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளோம்.

6. சிறுபாசனம்; நாட்டுப்புற மின்சார வசதி போன்ற சில வளர்ச்சித் திட்டங்களின் பணிக்காகத் திட்டத்தின் பகுதியாய் வகை செய்யப்பட்டுள்ள நிதி வசதி; நில அடைமான வங்கிகள்; வணிக வங்கிகள் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெறும் கடனுதவியால் மேலும் பெருகும்; இந் நிதி வசதிகளையும் கணக்கில் கொண்டு நடப்பு ஆண்டில் திட்டத்திற்கான செலவினத்தில் பெரும் பகுதி திட்டத்திலிருந்து திட்டமல்லாப் பகுதிக்கு மாற்றப்பட்டு; பொறுப்பேற்கப்பட்ட செலவினமாகக் கருதப்படுமென்பதையும் எண்ணிப் பார்ப்போமானால்; அடுத்த ஆண்டில் நாம் நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்களின் அளவு நடப்பு ஆண்டின் அளவைவிடக் கணிசமாக உயர்ந்து காணப்படுவது புலனாகும்.

7. வருகிற ஆண்டில் நாம் 7 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதிவாயில்களைத் திரட்ட வேண்டுமெனத் திட்ட ஆணைக்குழு வற்புறுத்தியுள்ளது. எனவே; வரவின மதிப்பீடுகளில் 5.60 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி திரட்டும் குறிப்புள்ளது. இத்தொகையில் ஒரு பகுதி கிராமக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் (Rural Debentures) வாயிலாகத் திரட்டப்படலாம். இது குறித்த விவரங்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட வளர்ச்சித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இத்தகைய குப்பிட்ட வளர்ச்சி திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இத்தகைய கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் வாயிலாக; கிராமப்புறங்களில் மக்களின் சேமிப்புகளைத் திரட்டுவதில் நாம் வெற்றி

காண்கிற அளவிற்கு; கூடுதலாக வரி விதிக்க வேண்டிய முயற்சி குறையும். மாநிலப் பொருளாதாரப் போக்குகளைச் சிறிது காலம் கூர்ந்து நாடிய பின்னர்; அரசு இது குறித்துத் திட்டவட்டமான செயற் குறிப்புகளை வகுக்கும்.

8. 1969-70-க்குரிய ஆண்டுத் திட்டத்திலும் வேளாண்மை உற்பத்திக்குத் தொடர்பான திட்டங்களுக்கு முதன்மை அளிக்கப் பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி குறித்த திட்டங்கள்; அடுத்த ஆண்டிற்குரிய திட்ட முதலீட்டில் 32 சத வீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதிக அளவில் முதலீடு வேண்டாத; ஆனால் பெருமளவில் செயலாண் திறமை வேண்டப் படுகிற மிகு பயன்தரும் விளைச்சல் திட்டம்; மலி பயிர் விளைச்சல் திட்டம் போன்றவை வரும் ஆண்டில் மேலும் முனைப்பாக்கப்படும். நம்மிடம் போதிய உர இருப்புகள் இருக்கும் இத் தருணத்தில் பருவ மழையும் இயல்புக்கேற்ப வாய்ப்பின்; இவ் வேலைத் திட்டங்களில் மூலம் வேளாண்மை உற்பத்தியைக் குறிப் பிடத்தக்க வகையில் பெருக்க நம்மால் இயலும். நாம் நெடு நாளாக ஆவலுடன் எதிர்நோக்கி நின்ற சேலம் உருக்காலைத் திட்டம் நிறுவப்படுவதன் முதற்படியாக; கஞ்சமலை இரும்புக் கனிகளை வெட்டியெடுக்கும் பணியைத் தொடங்கி வைக்க அடுத்த ஆண்டுத் திட்டம் கருத்துக் கொண்டுள்ளதை அறிய இம் மன்றத் தினர் பேருவகை அடைவரென நம்புகின்றேன். ஆலங்குளத் தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைக் கட்டி முடித்தல்; தூத்துக் குடியில் உரத்தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு வேண்டிய முன்னோடி வேலைகள்; உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் களுக்கான வேலைத்தொடக்கம் முதலியன தொழில் வளர்ச்சி குறித்து 1969-70-ம் ஆண்டுத் திட்டத்தில் காணப்படும் வேறு பிற சிறப்புக் கூறுகளாகும். சமுதாயத்தில் மிக எளிய நிலையிலுள்ள ஏழை மக்களுக்குப் பெரிதும் சிறப்பு வாய்ந்த கல்வி; மருத்துவம்; பொதுச் சுகாதாரம்; வீட்டு வசதி, தாழ குடியிருப்பு மேம்பாடு slum improbements போன்ற சமூகப் பணித் திட்டங்களுக்கும் போதிய அளவில் நிதி ஒதுக்கம் செய்ய முயன்றுள்ளோம்.

9. நமது தன்னேரிலாத் தலைவர் அண்ணா அவர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி; உறுதியான நிதிநிலைக்கு ஊறு விளைவிக் காமல் பொருளாதார வளர்ச்சி காண இந்த அரசு உறுதி பூண் டுள்ளது. ஆனால், நமது முயற்சிகளுக்கு மத்திய அரசின் செவ்விய பொருளாதாரக் கொள்கைகளும், நிதி உதவியும் துணை செய்யவேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வாறு இருப்பினும், இம்மன்றத்தின் எல்லாப் பிரிவினரும் நமது வளர்ச்சித் திட்டங் களுக்குப் போதிய அளவிற்கு மத்திய நிதி உதவி கிட்டவில்லை யென்ற நமக்குள்ள குறை மெய்யானது என்பதை ஏற்றுக் கொள்வார்களென்றும்; மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கு மிடையே நிதி வாயில்களை மேலும் நியாயமான முறையில் மறு பங்கீடு செய்ய வேண்டுமென்னும் நமது வேண்டுகோளை ஆதரிப்

பார்களென்றும் நான் நம்புகிறேன். மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் இடையேயுள்ள நிதி உறவுகள் மேலும் உள நிறைவு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டால், பிணக்குகள் குறைந்து இணக்கம் மிகுந்து நமது மக்களின் நல்வாழ்விற்குப் பயன் அளிக்கும் வகையில் ஒத்துழைப்பதற்கு வாய்ப்புகள் பல கிட்டுமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

10. இவை கூறி, 1969-70-ம் ஆண்டிற்கான இவ் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை ஏற்கும்படி இம் மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன்.

3-45 p.m. MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. on Monday the 3rd March 1969.

The House then adjourned.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS